DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 150/2021

Prosecution witness – PW.2

| | | |
|---|---|---|
| Name | :திருமதி.மரியாள் | Caste: |
| Husband's Name | : கார்த்திகைச்சாமி | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

11.02.2026 – 12.25 PM

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் கமுதி புனவாசல் காலனியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது அத்தை ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் பக்கத்து வீட்டுக்காரர். கடந்த 5 வருடங்களுக்கு முன்பு கொரோனா ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. அந்த சமயத்தில் எச்சில் வழியாகவும் தொற்று ஏற்படும் என்பதால் நாங்கள் பயந்து கொண்டுதான் இருந்தோம். 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை 04.00 மணியிலிருந்து 05.00 மணிக்குள் நான் எனது வீட்டு வாசலில் இருந்தபோது ஆஜர் எதிரியானவர் எங்கள் தெருவில் நின்று கொண்டு பல்லை விலக்கி ரோட்டில் துப்பினார்.

2. அப்போது எனது அத்தையான அ.சா.1 எதற்காக இவ்வாறு துப்புகிறாய் என்று கேட்கவும் எதிரி எனது அத்தையிடம் நீயும் தான் மீன் குழம்பு கழிவுகளை ஊற்றுகிறாய் என்று கேட்டார். உடனே எனது அத்தை நான் எதுவும் ஊற்றவில்லை. நீ எச்சில் துப்பாதே என்று சொன்னார். உடனே ஆஜர் எதிரியானவர் ஓடிச்சென்று எனது அத்தையின் கையில் எதிரி கடித்து காயத்தை ஏற்படுத்தியிருந்தார். 5 வருடம் ஆகிவிட்டதால் எதிரி எனது அத்தையின் எந்த கையில் எந்த இடத்தில் கடித்து காயம் ஏற்படுத்தினார் என்பது எனக்கு தற்போது ஞாபகமில்லை. நானும் இருளாயியும் சேர்ந்து சண்டையை விலக்கினோம்.

3. ஆஜர் எதிரியானவர் அங்கிருந்து சென்றுவிட்டார். பின்னர் எனது அத்தையின் தங்கை மகளான தமிழ்ச்செல்வி என்பவர் சிம்பூரிலிருந்து வந்து

எனது அத்தையை இரு சக்கர வாகனத்தில் ஏற்றி அபிராமம் காவல் நிலையம் அழைத்துச் சென்று எனது மாமியார் புகார் அளித்துவிட்டு பின்னர் கமுதி அரசு மருத்துவமனை சென்று எனது அத்தை சிகிச்சை பெற்றுக் கொண்டார். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

1. போலீசார் சம்பவதிற்கு மறுநாள் எங்கள் வீட்டருகே வந்து என்னை விசாரித்தார்கள். சம்பவ இடத்தை புகைப்படமும் எடுத்தார்கள். முதல் விசாரணை சாட்சியத்தில் கூறிய சங்கதிகளைத்தான் போலீசார் விசாரித்தபோதும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது அத்தை வீட்டிலிருந்து என் வீடு எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் எனது அத்தை வீட்டிற்கு எதிர்புறம் தான் உள்ளது. நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும் எனது அத்தை வீடு என் வீட்டிலிருந்து 100 அடி தொலைவில் உள்ளது என்றாலும் சரியல்ல. எனது அத்தை வீட்டிற்கு எதிர்புறம் உள்ள வீட்டிற்கு அருகில் தான் என் வீடு உள்ளது.

2. எனது மாமியார் வீட்டிற்கு அருகே செல்வம் வீடு உள்ளது என்றால் சரிதான். சிவசாமி என்பவரது வீடு செல்வம் வீட்டின் அருகே உள்ளது. சிவசாமி வீட்டிற்கு எதிர்புறம் என் வீடு உள்ளது. எங்கள் வீட்டின் அக்கம் பக்கத்தில் உள்ள அனைவரும் சண்டையை பார்த்தார்கள். நான் கூறியபடி சம்பவ இடத்தில் நான் இல்லை என்றாலும் நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் புகார் அளித்தவர் எனது மாமியார் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2026.02.11 17:14:15 +0530